**2026 பிப்ரவரி மாதம் 03– ஆம் தேதி செவ்வாய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 67/2021**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03– ஆம் தேதி செவ்வாய்கிழமை 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW2 நபரின் வாக்கு மூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW2 – மகாதேவி |
| தந்தை பெயர்: | பால்ராஜ் |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | சட்ட அலுவலர், ICICI Lombard Insurance Company, மதுரை |
| வயது : | 26 |

தேதி : 03.02.2026.

முதல் விசாரணை: –

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு 2வது சாட்சியாவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை 2வது எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக ஏற்க வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 09.12.2019ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் கம்பெனி 1ம் எதிர்மனுதாரரான மோகன முருகன் ஓட்டிச்சென்ற டிராக்டர் TN 60 E 8413 என்ற பதிவு எண்கொண்ட வாகனத்திற்கான காப்பீட்டு பாலிசி | **எ.ம.சா.ஆ.4** | இணையவழி நகல் |

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

வழக்கு சம்பந்தமான புலன் விசாரணை அதிகாரியின் அறிக்கையை வைத்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி என்னிடம் முதல் தகவல் அறிக்கையை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் 2வது பக்கத்தில் TN 60 E 8413 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் தான் இறந்த 1வது மனுதாரரின் மனைவிமீது மோதிய டிராக்டர் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு எங்களது நிறுவனத்தில் விபத்து சமயத்தில் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் டெய்லருக்கும் விபத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல. எங்களது நிறுவனத்தில் விபத்தை ஏற்படுத்திய டிராக்டரின் காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்ததால் எங்களது காப்பீடு நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் 1வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் பொறுப்பல்ல என்றாலும், எங்கள் நிறுவனம் தான் மனுதாரருக்கு இழப்பீடு தொகையை கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>** – 1வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 03.02.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.03 16:05:59 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
03.02.2026